அ.வ.எண். 32/2019 நாள்: 05.03.2026

பி.சா.1 திரு. ஜெயராமன்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

5) வாதி எந்த சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் புல எண்.192/32–க்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார், அதன் விஸ்தீரணம் என்ன என்றால் எனக்கு தெரியாது. புல எண்.192/32–க்கு நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும், வடக்கில் வெங்கடேசபெருமாள் கோவில், தெற்கில் திருவேங்கடம் வேளார், கிழக்கில் ராணி, மேற்கில் கோவிந்தசாமி ஆகியோரது இடம் உள்ளது, இதற்கு இடைப்பட்ட இடத்திற்குதான் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்து பூர்வீக இடமா அல்லது அரசாங்கத்தால் பட்டா வழங்கப்பட்டதா என்றால் அரசால் இலவசமாக பட்டா கொடுக்கப்பட்டது. தாவா இடத்தில் வீடு கட்டப்பட்டு குடியிருந்து வந்தார்களா என்றால் இல்லை.

6) இலவச வீட்டுமனை பட்டா வழங்கிய பிறகு வட்டாட்சியரிடம் நான் ஆட்சேபணை தெரிவித்தேனா என்றால் இல்லை. மாவட்ட ஆட்சியருக்கோ, கோட்டாட்சியருக்கோ பட்டா வழங்கப்பட்டதை ஆட்சேபித்து மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் ஒரு பகுதியில் தகரசீட்டு போட்டு சிரஞ்சீவி என்பவர் வாடகைக்கு குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.82/2018 வழக்கின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்192/16 ஆகும், அதன் விஸ்தீரணம் 54 ஏர்ஸ் ஆகும். நான் தாக்கல் வழக்கின் நான்கெல்லை தெரியுமா என்றால் தெரியும், வடக்கில் வெங்கடேசபெருமாள் கோவில், தெற்கில் திருவேங்கடம் வேளாளர், கிழக்கில் ராணி, மேற்கில் சின்னான் ஆகியோரது இடங்கள் உள்ளது.

7) மேற்சொன்ன நான்கெல்லைக்குள் உட்பட்ட இடம்தான் நான் சொன்ன 54 ஏர்ஸ் உள்ளதா என்றால் ஆமாம். வெங்கடேசபெருமாள்கோவிலுக்கு தெற்கு, ஆனக்குட்டி வேளார் இடத்திற்கு வடக்கு, சின்னான் மாதுரார் இடத்திற்கு கிழக்கு, 1ஆம் பிரதிவாதி ரவி (எ) கோவிந்தராஜ் இடத்துக்கும், சுந்தரமூர்த்தி இடத்துக்கும் மேற்கு இதற்குட்பட்ட இடத்திற்கான புல எண் தெரியுமா என்றால் புல எண்.192 அதன் உட்பிரிவு உள்ளதா என்றால் ஆம் 16 ஆகும். மேற்சொன்ன புல எண்.192/16க்கு வாதி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் புல எண்.192/32–ல் புல எண்.192/16–ஐ சேர்த்துதான் வழக்கு தாக்கல் செய்தார்.

8) என்னிடம் காட்டப்படும் புலவரைப்படத்தில் 16 மற்றும் 32 ஆகியன தனித்தனியாக உள்ளது என்றால் சரிதான். ஆனால் 16, 32 ஆகியன ஒரே இடம்தான். புல எண்.192/17–க்கு எனது தகப்பனார் பெயரில் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல் புல எண்.192/32–ல் வாதி ரவி (எ) கோவிந்தராஜிற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, அனுபவம் என்னிடம் உள்ளது. வாதி தாவா இடத்தை அளவீடு செய்ய 14.03.2023–ல் நிலஅளவையர் நிலஅளவை மேற்கொள்ள வந்தார் என்றால் இல்லை. அவ்வாறு நிலஅளவை செய்ய வந்தபோது நான் மண்ணெண்ணெய் ஊற்றி கொளுத்திக்கொள்வேன் என்று மிரட்டினேன் என்றால் நான் மிரட்டவில்லை.

9) நான் மிரட்டியதால் அன்றைய தினமே திருக்காட்டுப்பள்ளி காவல் நிலையத்தில் என்மீது வாதி புகார் கொடுத்திருந்தார் என்றால் இல்லை. மேற்படி வாதி கொடுத்த புகாரில் நான் கடந்த 15.03.2023–ல் திருக்காட்டுப்பள்ளி காவல் நிலையத்தில் ஆஜராகி நாங்கள் தாவா இடத்தில் மாடோ, ஆடோ கட்டமாட்டோம் நீதிமன்ற தீர்ப்பு வரும்வரை ரவி குடும்பதாருக்கு எவ்வித பிரச்சனையும் செய்ய மாட்டோம், நடந்ததற்கு வருத்தம் தெரிவிக்கிறோம் என்று நானும், சுந்தரமூர்த்தி, சின்னதம்பி, ஜெயலெட்சுமி ஆகியோர் எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள நபர் நான், எனது அம்மா இருக்கிறோம், வேறு நபர்கள் யார் என்று தெரியவில்லை.

10) வாதி தாக்கல் செய்துள்ள வரிரசீதுகள் தாவா இடத்திலுள்ள தகர வீட்டிற்குரியது என்றால் அவ்வாறு வீடே இல்லை. எதனடிப்படையில் வாதிக்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்று எப்படி எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் தாவா சொத்து எங்களது தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்ட பாகம். எனது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டதுபோல் வாதி எப்போது வழக்கு சொத்தை விலைக்கு கேட்டார் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 2018–ல் கேட்டார். அவ்வாறு 2018–ல் வாதி விலைக்கு கேட்டார் என்று எதிர்வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. வட்டாட்சியர் வாதிக்கு கொடுத்த சிட்டா, அடங்கல் செல்லதக்கதல்ல என்று எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் அதை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் நீதிமன்றத்திற்கு வந்துள்ளேன்.

11) நான் இந்த வழக்கின் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.82/2018 வழக்கில் வட்டாட்சியரை ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். அரசாங்கம் யார்யார் தாவா இடத்தை அனுபவம் செய்து வருகின்றனர் என தெரிந்துதான் எனது சகோதரர் விஜயகுமார், தகப்பனார் சுந்தரமூர்த்தி, வாதி ரவி (எ) கோவிந்தராஜ், அருகில் வசிக்கும் ராணி மற்றும் அருகில் வசிக்கின்ற அனைவருக்கும் பட்டா கொடுத்து அதனடிப்படையில் அவரவர் அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் தவறு.

12) என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் வழக்கு எந்த இடத்திற்கு தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரம் தெரியாமலேயே நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தெரிந்துதான் சாட்சியம் அளிக்கிறேன். வாதி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து விசாரித்தபோது தவறுதலாக நடந்துவிட்டது என்பதை கூறி எழுதிக்கொடுத்துவிட்டு தற்போது நீதிமன்றத்தில் அதனை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை பொறுத்து வாதியால் கோரப்பட்ட பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d/ Jeyaraman

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.03.05 11:59:56 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU